270—

கட்டட வசதி

***19912—திரு. இரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டத் தொழிலாளர் நல அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது பெரம்பலூர் மாவட்டத் தொழிலாளர் நல அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பெரம்பலூர் மாவட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஏதுவாக 10,000 சதுர அடி நிலம் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 4,200 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்து தர, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியாளர் அவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிக்கை வரப்பெற்ற பின்னர், பெரம்பலூர் மாவட்டத் தொழிலாளர் நல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் அரசியல்வாதி, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்தித்த அரசியல் ஞானியாக, பெரம்பலூர் மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான விசுவக்குடி கல்லாற்றுத் திட்டத்திற்கு 19 கோடி ரூபாயும்,*

2012 மே 15]

பெரம்பலூர் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலத்துறையைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டத்தையும், வள்ளன்மையோடு வாரி வழங்கிய வான்மேகம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-45

வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிற தொழிலாளர் நல அலுவலகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடத்தை அமைத்துத் தருவேன் என்ற உத்தரவாதத்தை அளித்து இருக்கிற தொழிலாளர்களின் விடிவெள்ளி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

271—

சித்த மருத்துவக் கல்லூரி

***5501—திரு. கே.சி. வீரமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை அடிவாரப் பகுதியில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை அடிவாரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.